**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின்2017–2018ம் ஆண்டிற்கான அறிவிப்புகள்–2017–2018 ஆம் நிதியாண்டு மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை மூலம் ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் அறிவுத்திறன் மதிப்பீடு செய்து மறுவாழ்விற்கு உதவும் திட்டம்– நிருவாக அனுமதி வழங்குதல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண். 58

நாள்: 08–08–2017
ஹேவிளம்பி, ஆடி 23,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:-

1. மானியக் கோரிக்கை எண்.52, 2017–18 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பு நாள் 24.06.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்(மு.கூ.பொ) ந.க.எண்.1383/ சி.ப.2/2017, நாள் 01.07.2017.

-------------

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 24.06.2017 அன்று மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

‘‘தமிழக அரசு சிறப்புப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு, உணவு, உறைவிடம், கல்வி மற்றும் உதவி உபகரணங்கள் ஆகியவற்றை விலையில்லாமல் வழங்கி, சிறப்பு கல்வி திட்டத்தினை செம்மையாக செயல்படுத்தி வருகிறது. இதனை மேலும் சிறப்பாக செயல்படுத்த இக்குழந்தைகளின் உடல் நிலையினை பரிசோதனை செய்து ஊட்டச்சத்து குறைபாட்டினை கண்டறிந்து அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இக்குழந்தைகளின் அறிவுத்திறனை மதிப்பீடு செய்து அதற்கு ஏற்றவகையில், மாணவர்கள் உரிய மேற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சியினை பெற்று, வேலை வாய்ப்பிற்கு உதவும் வகையில் முகாம்கள் நடத்தப்படும். இத்திட்டம் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.11.00 இலட்சம் நிதி செலவில் செயல்படுத்தப்படும்.’’

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில், மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை மூலம் ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் அறிவுத்திறன் மதுப்பீடு செய்து மறுவாழ்விற்கு உதவும்

திட்டத்தினை 2017–2018–ம் ஆண்டில் புதியதாக தொடங்கிட ரூ.11.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்கள் அறிவிப்பினை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2017–2018–ம் நிதியாண்டில் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை மூலம் ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் அறிவுத்திறன் மதுப்பீடு செய்து மறுவாழ்விற்கு உதவும் திட்டத்தினை புதியதாக தொடங்கிட கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிருவாக ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

i. இத்திட்டத்தினை செயல்படுத்திட முறையான கொள்முதல் நடவடிக்கைகளை பின்பற்றிட வேண்டும்.
ii. மதிப்பீட்டு நிறுவன தேர்வுக்குப் பின்னர் செலவின ஒப்பளிப்பு ஆணை தனியாக வெளியிடப்படும்.

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.40485/நிதி(சந)/2017, நாள் 02.08.2017 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.).**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.

**<u>நகல்:–</u>**
நிதி (சந) துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு தனிச் செயலாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.